| | | | |
|---|---|---|---|
| Headline | Tokio Marine's new insurance plan | | |
| MediaTitle | Malaysian Nanban | | |
| Date | 29 Nov 2017 | Language | Tamil |
| Circulation | 65,000 | Readership | 415,000 |
| Section | News | Page No | 7 |
| ArticleSize | 395 cm² | Journalist | NULL |
| PR Value | RM 6,895 | | |
| | | | |



# தோக்கியோ மரீன் நிறுவனத்தின் புதிய காப்புறுதித் திட்டம்

கோலாலம்பூர், நவ. 29-

மலேசிய தோக்கியோ மரீன் காப்புறுதி நிறுவனம், மலேசியர்கள் வாங்கக்கூடிய சக்தியிலான புதிய காப்புறுதித் திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது. தோக்கியோ மரீன் - ஸ்டார்டர் பெக் (Tokio Marine-StarterPack) எனும் இக்காப்புறுதித் திட்டம் வெ.50,000 வரை மரண காப்பீட்டை வழங்குகிறது.

இத்திட்டத்திற்காக நீங்கள் செலவிட வேண்டியது நாள் ஒன்றுக்கு வெ.0.50 மட்டுமே. காப்பீடு வழங்கப்படுபவர் மரணமடையும் பட்சத்தில் மொத்தமாக ஒரு தொகை அவர்களுக்கு வழங்கப்படுவதை இத்திட்டம் உறுதி செய்கிறது.

நடப்பு வாழ்க்கைச் செலவினங்களை சமாளிக்கும் வகையில் ஒரு குடும்பத்திற்கு ஏற்ற பொருளாதார உதவியை வழங்குவதற்கு தோக்கியோ மரீன் - ஸ்டார்டர் பெக் திட்டம் வகை செய்கிறது.

இது ஓர் அடிப்படை பாதுகாப்பு திட்டத்தை வழங்குகிறது. மருத்துவ பரிசோதனையை மேற்கொள்ளும் அவசியம் இல்லை. எந்தவித சிக்கலும் இல்லாத பதிவு முறையுடன், குறிப்பாக நடுத்தர வருமானம் பெறும் பிரிவினருக்கு ஏற்ற வசதியிலான அத்தியாவசிய காப்புறுதித் திட்டமாக இது விளங்குகிறது என்று தோக்கியோ மரீன் லைஃப் நிறுவனத்தின் தலைமை செயல்முறை அதிகாரி தோய் சீ ஜோங் கூறினார்.


TOKIO MARINE
INSURANCE GROUP

பேங்க் நேகாரா மலேசியா அண்மையில் அறிமுகம் செய்த பெர்லின்டுங்கான் தெனாங் என்ற காப்பீட்டுத் திட்டத்திற்கு ஏற்ப இக்காப்புறுதி வழங்கப்படுகிறது. சிரமமான சூழ்நிலைகளை எதிர்கொள்வதற்கு மலேசியர்களை தயார் செய்யும் நோக்கத்தில் உருவாக்கப்பட்டு பேங்க் நெகாரா முயற்சிகளுக்கு தோக்கியோ மரீன் ஆதரவளிக் கிறது என்றும் அவர் குறிப் பிட்டார்.




*பேங்க் நெகாரா கவர்னர் டான்ஸ்ரீ முகமட் இப்ராஹிம், சரவா பொருளாதார விழா ஒன்றில் தோக்கியோ மரீன் - ஸ்டார்டர் பெக் காப்புறுதித் திட்டத்தை தொடக்கி வைத்தார்.*

பேங்க் நெகாரா புள்ளி விவரங்கள்படி, 10 மலேசியர்களில் ஒருவருக்கு ஆயுள் காப்புறுதி பாதுகாப்பு உள்ளது. வேலை செய்யும் வயதுடைய சுமார் 80 லட்சம் மலேசியர்களுக்கு பாதுகாப்பு வழங்குவது பெர்லின்டுங்கான் தெனாங் திட்டத்தின் நோக்கமாகும்.




பதினெட்டு முதல் 55 வயதுடைய மலேசியர்கள் தற்போது தோக்கியோ மரீன் - ஸ்டார்டர் பெக் திட்டத்திற்கு விண்ணப்பம் செய்யலாம். நாடு தழுவிய நிலையில் உள்ள தோக்கியோ மரீன் லைஃப் கிளை அலுவலகங்களில் இதற்கு விண்ணப்பம் செய்யலாம். அல்லது customercare@tokiomarinelife.com.my என்ற மின் அஞ்சல் முகவரியில் / www.tokiomarine.com என்ற அகப்பக்கத்தில் தகவல் பெறலாம்.